www.Kanchikalvi.com www.TnpscExamOnlineResult.blogspot.in

X-FP

Reg.No. 1 0 0 2 2

T1-2

# முழுப் பாடத்திட்டத் தேர்வு – 2

## பத்தாம் வகுப்பு

## தமிழ் முதல் தாள்

(செய்யுள் - உரைநடை)

நேரம்: 2.30 மணி மொத்த மதிப்பெண்கள்: 100

அறிவுரை: 1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளனவா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு: i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

ii) வினா எண் 49- க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

பிரிவு - I (மதிப்பெண்கள் - 20)

### பகுதி - 1

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 6x1=6

1. 'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' எனப் பாடியவர் ..............
   அ) பாரதியார் ஆ) சுரதா இ) பாரதிதாசன்
2. நற்றிணையைத் தொகுப்பித்தவர் ..............
   அ) பன்னாடு தந்த மாறன்வழுதி ஆ) இளம்பெருவழுதி இ) உக்கிரப் பெருவழுதி
3. தம் வீட்டிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் திருநாவுக்கரசர் எனப் பெயர் சூட்டியவர் ..............
   அ) அப்பூதியடிகள் ஆ) மாறநாயனார் இ) திருநீலகண்டர்
4. 'உலகம்' என்னும் தமிழ்ச்சொல் .............. என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது.
   அ) உலகு ஆ) உலவு இ) உளது
5. காந்தியடிகள் .............. நாடகத்தைப் பார்த்து உண்மையே பேச வேண்டும் என்று உறுதி பூண்டார்.
   அ) சிரவணபிதுர் பக்தி ஆ) அரிச்சந்திரன் இ) பக்தப்பிரகலாதன்
6) பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி ..............
   அ) பத்தாம் வகுப்பு ஆ) பன்னிரண்டாம் வகுப்பு இ) எட்டாம் வகுப்பு

### பகுதி - 2

கோடிட்ட இடங்களை நிரப்புக: 6x1=6

7. நால்வகைப் பாக்களும் வயலுக்கு .............. அமைந்துள்ளன.
8. திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள் .............. என வழங்கப்படுகிறது.
9. 'பொறாரைப் பொறுத்தல்' என்பது .............. எனப்படும்.
10. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள .............. ஒன்று உண்டு.
11. பேச்சு முடிவில் .............. கூறிக் கருத்தினை நிலைநாட்டி முடித்தல் வேண்டும்.
12. இராமலிங்கர் தமிழ் மொழியே .............. தரும் என்று கருதினார்.

www.TnpscExamOnlineResult.blogspot.in www.Kanchikalvi.com

## பகுதி - 3

பொருத்துக: 4x1=4

13. செறுநர் - மாலை
14. அல் - மலை
15. தொடை - பகைவர்
16. பூதரம் - இருள்

## பகுதி - 4

விடைக்கேற்ற வினா அமைக்க: 4x1=4

17. செய்திப்படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டுகளிக்கலாம்.
18. தமிழர்கள் அரபுநாட்டுடனும், யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.
19. இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், தெய்வப்பற்றும் வளரும் வகையில் கல்வி அமைதல் வேண்டும்.
20. இளங்கலைப்பட்டம் பெற்றவர்கள், இளங்கலைக் கல்வியியல் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்.

## *பிரிவு - II (மதிப்பெண்கள் -20)*

## பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க: 5x2=10

21. ஏலாதி - நூற்குறிப்பு எழுதுக.
22. 'அன்புள இனி நாம்ஓர் ஐவர்கள் உளரானோம்' - யார் யாரிடம் கூறியது?
23. அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர்?
24. சிவபெருமான் எத்தன்மையன் என நாவுக்கரசர் கூறுகிறார்?
25. பகைமை இருளைப் போக்குவது எதுவென வள்ளுவர் கூறுகிறார்?
26. நந்திவர்மன் பெருமைகளாக நந்திக்கலம்பகம் கூறுவன யாவை?
27. நமது கை, கால்களின் பயன்களாக இளந்திரையன் எவற்றைக் கூறுகிறார்?

## பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க: 5x2=10

28. ஒருமொழி நிலைபெற்று நிற்பதற்குரிய தகுதிப்பாடுகள் யாவை?
29. கல்விப்படங்கள் வாயிலாக நாம் அறிவன யாவை?
30. ஏற்றுமதி இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?
31. கண்ணிடந்து அப்பியவர் யார்? அவர் வரலாறு உணர்த்தும் செய்தி யாது?



www.Kanchikalvi.com

www.Kanchikalvi.com www.TnpscExamOnlineResult.blogspot.in



32. காந்தியடிகளுக்கு இளம்பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர்பண்புகள் யாவை?

33. சத்திய தருமச்சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?

34. பட்டப்படிப்புகளில் எவையேனும் நான்கினை எழுதுக.

### பிரிவு - III (மதிப்பெண்கள் - 24)

#### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க: 3x4=12

35. செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை?

36. சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப் பற்றி இராமன் கூறியதென்ன?

37. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?

38. சேக்கிழார் - குறிப்பு எழுதுக.

39. புலியின் கொடுஞ்செயல்கள் பற்றி உமறுப்புலவர் கூறுவன யாவை?

#### பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க: 3x4=12

40. பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை?

41. அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை?

42. பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்?

43. கடல் வாணிகம் குறித்து எழுதுக.

44. இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?

### பிரிவு - IV (மதிப்பெண்கள் - 10)

45. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க: 5x1=5

தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே உன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்ப முண்டு விளம்பக்கேள்.

i) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

ii) முத்தமிழ் - விரித்து எழுதுக.

iii) இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைகளை எடுத்து எழுதுக.

iv) உன்னோடு வந்துரைக்கும் - பிரித்து எழுதுக.

v) விளம்பக்கேள் - பொருள் எழுதுக.

www.Kanchikalvi.com

www.TnpscExamOnlineResult.blogspot.in www.Kanchikalvi.com

www.Kanchikalvi.com www.TnpscExamOnlineResult.blogspot.in



46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. 5×1=5

'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பார் திருமூலர். உடலை ஓம்ப வேண்டியதன் இன்றியமையாமையைத் தமிழர் அறிந்திருந்தனர்.

திருவள்ளுவர் 'மருந்து' என்னும் ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார். உடல் உறுதியாய் இருப்பதற்கு வாதம், பித்தம், சீதம் இம்மூன்றின் சமநிலையே காரணமாகும். இவற்றின் சமநிலை தவறும்போது நோய் மிகும்.

அவற்றைச் சமப்படுத்த இயற்கை தரும் காய்கனிகளிலிருந்தே மருந்து கண்டு உண்டனர். 'மருந்தாகித் தப்பா மரத்தற்றால்' என்னும் திருக்குறள் வரி, தமிழ் மருத்துவத்தின் தொன்மையை எடுத்தியம்பும். பதினெண்சித்தர்கள் வளர்த்த மருத்துவம் சித்த மருத்துவமாயிற்று.

i) உடல் உறுதியாய் இருப்பதற்கு எவை காரணமாகும்?

ii) தமிழ் மருத்துவத்தின் தொன்மையை எடுத்தியம்புவது எது?

iii) 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்று கூறியவர் யார்?

iv) தமிழர் இயற்கை தரும் காய்கனிகளிலிருந்து எது கண்டு உண்டனர்?

v) பதினெண்சித்தர்கள் வளர்த்த மருத்துவம் எது?

## பிரிவு - V (மதிப்பெண்கள் - 26)

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 2×8=16

47. அ) "தேரா மன்னா" என விளித்துக் கண்ணகி கூறியன யாவை?

(அல்லது)

ஆ) பொருள் செயல்வகை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் வளமார்ந்த கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

48. அ) செம்மொழிக்குரிய வரையறைகளுள் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) தொழிற்கல்வி, தொழில்நுட்பக்கல்வி குறித்து விரிவாக எழுதுக.

### பகுதி - 2

செய்யுள் வடிவில் விடை தருக. 2+2+3+3=10

49. அ) "அருவினை" .... எனத் தொடங்கும் குறள்.

ஆ) "பழி" என முடியும் குறள்.

இ) "மெய்தான் அரும்பி" .... எனத் தொடங்கும் வாழ்த்துப் பாடல்.

ஈ) "இன்று தொட்டிவண்" .... எனத் தொடங்கும் சீறாப்புராணப் பாடல்.

* * * * * *

www.TnpscExamOnlineResult.blogspot.in www.Kanchikalvi.com